சுருக்கம்

பள்ளிக் கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் இயங்கும் மாதிரிப் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் மணிநேர அடிப்படையில் (Hourly basis) ஆசிரியர்களை நியமனம் செய்ய அனுமதி அளிப்பது– ஆணை வெளியிடப்படுகிறது.

---

***<u>பள்ளிக் கல்வி (சி2) துறை</u>***

**<u>அரசாணை (நிலை) எண்.5</u>** **<u>நாள்: 09.01.2012</u>**

**திருவள்ளுவர் ஆண்டு 2042**
**மார்கழி, 24**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.144, பள்ளிக் கல்வித் துறை நாள் 24.05.2010
2. அரசாணை (நிலை) எண்.321, பள்ளிக் கல்வித் துறை நாள் 22.12.2010
3. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநா□ன் கடித ந.க.எண்.10/அ2/அஇகதி/2011, நாள் 27.10.2011.

**<u>ஆணை</u>:-**

தமிழ்நாட்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் 2010-2011ஆம் கல்வியாண்டு முதல் 10 மாவட்டங்களில் உள்ள 18 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் 18 மாதிரிப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், இம்மாதிரிப்பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் 17 ஆசிரியர் பணியிடங்களும், 7 ஆசிரியரல்லாத பணியிடங்களும் அனுமதிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட 18 மாதிரிப் பள்ளிகளில் மொத்தம் 306 ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், இவற்றில் தற்பொழுது 19 ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர் என்றும், பெரும்பாலான இடங்கள் காலியாக உள்ளதால், மாணவர் நலன் கருதி வேறு அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கூடுதல் பணியாக மாற்றுப்பணியில் அமர்த்தி பயிற்றுவித்து வருவதாகவும், மாற்றுப் பணியில் பணிபுரியும் ஆசிரியர்களின் சொந்த பள்ளிகளின்(Parent Schools) மாணவர்கள் இதன் மூலம் பாதிக்கப்படுவதாகவும் கூடுதல் மாநில திட்ட இயக்குநர் தொ□வித்துள்ளார்.

3. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாதிரிப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள், ஏற்கனவே ஆசிரியர் பயிற்றுநர்களாக பணியாற்றி தற்பொழுது பட்டதாரி ஆசியர்களாக மற்றும் முதுகலையாசிரியர்களாக பணியாற்றுபவர்கள் மட்டுமே நியமனம் செய்யப்படத் தகுதியுடையவர்கள் என ஆணையிடப்பட்டுள்ளன என்றும் இவ்வாறான ஆசிரியர்களில் பெரும்பாலானோர் மாதிரிப் பள்ளிக்கு வர விரும்பவில்லை என்றும் இதன் காரணமாக பெரும்பாலான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்றும் கூடுதல் மாநில திட்ட இயக்குநர் தொ□வித்துள்ளார்.

**4.** தற்பொழுது, இப்பள்ளிகளில் மொத்தம் **3479** மாணவர்கள் பயின்று வருகின்றனர் என்றும், இதில் **10**ஆம் வகுப்பில் **300** மாணவர்களும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு வகுப்பில் **100** மாணவர்களும் பயின்று வருகின்றனர் என்றும், இவர்கள் வருகிற மார்ச் மாதத்தில் அரசு பொதுத் தேர்வை எழுத உள்ளதாகவும், மாதிரிப்பள்ளிகள் மற்ற அரசுப் பள்ளிகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் தொடங்கப்பட்டுள்ளன என்றும், ஆனால் இப்பள்ளிகளில் முழுமையாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதால் இப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பணி செம்மையாக நடைபெற முடியாத சூழல் உள்ளதாகவும் கூடுதல் மாநில திட்ட இயக்குநர் தொவித்துள்ளார்.

**5.** மத்திய அரசு பள்ளிகளான கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஏதுவாக பணிபுரியும் மணிநேர (Hourly basis) அடிப்படையில் ஆசிரியர் பட்டம் பெற்ற பணி நாடுநர்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் ( Contract basis) பயன்படுத்திக் கொள்ளும் முறை நடைமுறையில் உள்ளது என்றும் இதனால் இப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பணி தொய்வின்றி நடைபெற்று வருகின்றன என்றும் தொவித்து, கேந்திரிய வித்யாலாயாவில் உள்ள நடைமுறைகள் கீழ்க்கண்டவாறு உள்ளதாக கூடுதல் மாநில திட்ட இயக்குநர் தொவித்துள்ளார்.

அ. ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பந்தப்பட்ட பள்ளி நிதியிலிருந்து சேவைக் கட்டணம் வழங்கப்படும்.

ஆ. புது தில்லி கேந்திரிய வித்யாலயா இணை ஆணையரின் அலுவலக குறிப்பாணையின்படி, (F–28-17/2007 – KVS (Acad) நாள்: **30.12.2008**) கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பின்வருமாறு திருத்திய மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஆசிரியர் பணியிடம்** | **வழங்கப்படும் திருத்திய மதிப்பூதியம்** |
|---|---|---|
| 1) | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் (அனைத்துப் பாடங்களுக்கும்) | **ஒரு பாடவேளைக்கு ரூ.120/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |
| 2) | பட்டதாரி ஆசிரியர்கள் (அனைத்துப் பாடங்களுக்கும்) | **ஒரு பாடவேளைக்கு ரூ.110/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |
| 3) | தொழிற்கல்வி பயிற்றுநர்கள் (கலை, கைத்தொழில், இசை, ஆகியன) | **ஒரு பாடவேளைக்கு ரூ.100/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |
| 4) | ஆங்கில மொழி பேச்சுத்திறன் (Spoken English) ஆசிரியர்கள் | **ஒரு பாடவேளைக்கு ரூ.80/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |

**6.** ஒப்பந்த அடிப்படையில் சேவைக் கட்டணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான கல்வித் தகுதி மற்றும் அனுபவம் ஆகியன தற்போதைய நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்படும் என்றும், ஒரு முறை ஒப்பந்த அடிப்படையில் ஒரு பள்ளியில் சேவை செய்வோர் மீண்டும் அதே பள்ளியில் அடுத்த கல்வியாண்டில் உரிமை கோர முடியாது போன்ற நடைமுறைகளை பின்பற்றி மாதிரிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் நலனைக்

கருத்தில் கொண்டு, மைய அரசாங்கப் பள்ளியான கேந்திரிய வித்யாலயாவில் நடைமுறையில் இருப்பதைப் போன்று, பணிபுரியும் மணிநேர (Hourly basis) அடிப்படையில் ஆசிரியர் பட்டம் பெற்ற பணி நாடுநர்களின் சேவைகளைப் பயன்படுத்திக் கொண்டால் மாணவர்களின் நலன் பெரிதும் பாதுகாக்கப்படும்.

7. இவ்வாறு ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்திக் கொள்வதற்கான செலவினம் மாதிரிப் பள்ளிகளுக்கான தொடர் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்றும் இதன் பொருட்டு சம்மந்தப்பட்ட மாதிரிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் உள்ளூரில் விண்ணப்பிக்கும் பணி நாடுநர்களில் சிறந்த திறமை உள்ளவர்களை முதன்மைக்கல்வி அலுவலர் மேற்பார்வையில் தேர்வு செய்து மணி நேர அடிப்படையில் பணியிடம் காலியாக இருக்கும் காலத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூடுதல் மாநில திட்ட இயக்குநர் தொிவித்துள்ளார்.

8. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநரின் கருத்துரு நன்கு பரிசீலிக்கப்பட்டு, மைய அரசுப் பள்ளியான கேந்திரிய வித்யாலயாவில் நடைமுறையில் உள்ளதைப் போன்று, தமிழகத்தில் உள்ள 18 மாதிரிப்பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் நிரந்தர ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும் வரை மணிநேர (Hourly basis) அடிப்படையிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையிலும் ஆசிரியர் பயிற்சி பட்டம் பெற்ற பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் சேவையை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பயன்படுத்திக் கொள்ள அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்ட கூடுதல் மாநிலத் திட்ட இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(i) ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பின்வருமாறு மதிப்பூதியம் வழங்கலாம்.

| வ. எண். | ஆசிரியர் பணியிடம் | வழங்கப்படும் திருத்திய மதிப்பூதியம் |
|---|---|---|
| 1) | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் (அனைத்துப் பாடங்களுக்கும்) | **ஒரு பாடவேளைக்கு ரூ.120/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |
| 2) | பட்டதாரி ஆசிரியர்கள் (அனைத்துப் பாடங்களுக்கும்) | **ஒரு பாடவேளைக்கு ரூ.110/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |
| 3) | தொழிற்கல்வி பயிற்றுநர்கள் (கலை, கைத்தொழில், இசை, ஆகியன) | **ஒரு பாடவேளைக்கு ரூ.100/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |
| 4) | ஆங்கில மொழி பேச்சுத்திறன் (Spoken English) ஆசிரியர்கள் | **ஒரு பாடவேளைக்கு ரூ.80/- வீதம்,** ஒரு நாளுக்கு அதிகப்பட்சம் 5 பாட வேளைகள் மட்டும் |

(ii) ஒப்பந்த அடிப்படையில் சேவைக் கட்டணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான கல்வித் தகுதி மற்றும் அனுபவம் ஆகியன தற்போதைய நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்பட வேண்டும்.

(iii) ஒரு முறை ஒப்பந்த அடிப்படையில் ஒரு பள்ளியில் சேவை செய்வோர் மீண்டும் அதே பள்ளியில் அடுத்த கல்வியாண்டில் உரிமை கோர முடியாது.

(iv) சம்மந்தப்பட்ட மாதிரிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் உள்ளூரில் விண்ணப்பிக்கும் பணி நாடுநர்களில் திறமை உள்ளவர்களை முதன்மைக்கல்வி அலுவலர் மேற்பார்வையில் தேர்வு செய்து மணி நேர அடிப்படையில் பணியிடம் காலியாக இருக்கும் காலத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(v) ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்திக் கொள்வதற்கான செலவினம் மாதிரிப் பள்ளிகளுக்கான தொடர் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூடுதல் மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டம், சென்னை–6.
மாநிலத் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வித் திட்டம், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்.
சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமை கணக்காயர், சென்னை–18.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.